**நீர்கொழும்பு மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்கொழும்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நீர்கொழும்பு மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியம இலக்கம் 3.5 இன் பிரகாரம் மற்றும் LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 12 ஆந் திகதிய | நிலையான சொத்துக்களை தொகுதிகளாக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களில் | உள்ளூராட்சி நிறுவனங்களுக் கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் உள்ளூராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | கடிதத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சபைக்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் 14 வகையின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் சபைக்குச் சொந்தமான காணி, கட்டிடம், அலுவலக உபகரணம், கணினி, கணனி மென்பொருள் போன்ற சொத்துக்கள் இனங்கண்டு தொகுதிகளாக்கப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்கப்படும் என அறியத்தருகின்றோம். | ஆணையாளரின் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 18.7 மற்றும் LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் 2021 பெப்ரவரி 01 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சகல சொத்துக்களும் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் உரிய தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (இ) | நியம இலக்கம் 6.11 இன் பிரகாரம் ஒவ்வொரு காலப்பகுதியின் போதும் ஆதனங்கள்,, பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்தல் செலவினம் மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்குரிய வெளித்தரப்பினரிடமிருந்து கிடைத்த மூலதன செலவின மானிய பெறுவனவுகள் ரூபா 35,256,464 இற்காக முன்னைய ஆண்டுகளுக்குரிய கடன்கொடுத்தோருக்கு செலுத்துதல்கள் ரூபா 33,970,335 ஆனமையால் மிகுதி ரூபா 1,286,129 தொகைக்காக கடன்கொடுத்தோராக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மூலதன மானியமாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 59,030,161 தொகையில் 63 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி விரிவான வருமானக் கூற்றில் மூலதன செலவின மானியக் கணக்கின் கீழ் இலக்கம் 10 இன் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிற்காக கிடைத்த மூலதன மானியம் ரூபா 35,256,464 மற்றும் மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,973,430 மூலதன மானியத்தின் ஒரு பகுதி கூட்டுத்தொகையான ரூபா 37,229,894 மாத்திரம் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பெறுமதி வருமானத்தில் இனங்காணப்படாமல் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | குறுங்கால செலுத்த வேண்டியவைகளாக நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் முன்னைய ஆண்டின் போது கிடைத்த மூலதன செலவின மானியங்கள் மூலம் இந்த மானியங்கள் ஈடுபடுத்தப்பட்டு சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு சதவீதத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீட்டின் பிரகாரம் பெறப்பட்ட காலக்கழிவு பெறுமதியை நடைமுறையல்லா செலவினமாக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். எனினும், முன்னைய ஆண்டிற்காக கிடைத்த மூலதன செலவின காலக்கழிவுப் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக வெளித் தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டிய 60 செயற்திட்ட வேலைகளின் கடன்பட்டோர் ரூபா 57,056,731 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் 64 செயற்திட்டங்களுக்காக ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய வேலைக் கடன்கொடுத்தோர் ரூபா 59,461,946 இற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையால் அந்த அளவினால் வேலைக் கடன்கொடுத்தோர் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 180,494,981 நானாவித கடன்கொடுத்தோர் மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட கடன்கொடுத்தோருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 6,763,982 ஆன நடைமுறைச் சொத்துக்கள் குறைக்கப்பட்டதன் பின்னரான மீதி வீதம் அந்த அளவினால் கடன்கொடுத்தோர் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் கணக்குகளின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (ஊ) | காமச்சோடை டட்லி சேனாநாயக்க மத்திய சந்தையின் (கட்டம் 1) கட்டிட நிர்மாணத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்த நிதியத்திலிருந்து 2021 ஒக்தோபர் 13 ஆந் திகதி கிடைத்த ரூபா 38,840,000 ஆன கடன் பணம் 2021 திசெம்பர் 06 ஆந் திகதி சபையினால் தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களில் அந்தப் பணம் முதலீடு மற்றும் உள்நாட்டுக் கடன், அபிவிருத்தி நிதியத்தின் கடனாக காண்பிக்கப்படாமையால் செலுத்த வேண்டிய நீண்டகால கடன் மற்றும் முதலீடுகள் அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (எ) | சபைக்குச் சொந்தமான 07 இறைச்சிக் கடைகள் வாடகையாளருக்கு கொவிட் தொற்றுநோயின் காரணமாக மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 310,774 ஆன வரிச் சலுகைப் | எதிர்காலத்தின் போது கணக்கு வைக்கும் போது சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி ஆண்டின் சிட்டையிடப்பட்ட பெறுமதியில் அகற்றப்படாமையினால் மீளாய்வாண்டில் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி மேலதிகம் வரவு மற்றும் தண்டப்பணம் ரூபா 5,020,376 சிட்டையிடப்பட்ட தொகையாக ஆதனவரிக் கணக்கில் செலவிடுவதற்கு பதிலாக நிலுவையாகவிருந்த ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் ஆதனவரி மற்றும் நிலுவையாக இருந்த ஏனைய வருமானக் கணக்குகள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஐ) | மாற்றல்கல் அல்லாத கொடுப்பனவுகளிலிருந்து பெற வேண்டியதாக ரூபா 203,451,284 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த செலுத்த வேண்டிய மீதியாக குறிப்பிடப்பட்ட 03 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 243,670 குறைக்கப்பட்டதன் பின்னர் ஆனமையால் அப்பெறுமதியால் பெற வேண்டிய மீதி குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட புதிய மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற 149 மோட்டார் வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 262,659,600 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் மூலம் அவற்றின் பெறுமதியாக ரூபா 238,216,674 மாத்திரமே காண்பிக்கப்பட்டமையால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 24,442,926 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 95,850,287 ஆன செலவினம் சொத்தாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக விரிவான வருமானக் கூற்றில் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் விரிவான வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் களஞ்சிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட பெறுமதி ஆண்டின் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | - மேற்படி - |
| (ஔ) | மாநகர சபை மற்றும் யப்பானின் Institute for Global Environmental Strategies நிறுவனம் ஒன்றிணைந்து நிதி பங்களிப்புடன் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்த வள மீள்சுழற்சி நிலையத்திற்காக 2021 மார்ச் 31 ஆந் திகதி வரையில் இரண்டு கட்டங்களுக்குரிய ரூபா 6,313,200 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மீள் சுழற்சி நிதியம் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் அல்லது நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மிகுதி எதிர்வரும் ஆண்டின் போது நிலையான சொத்துக்கள் கட்டிடமாக கணக்கீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |
| (க) | கொச்சிக்கடை மற்றும் தலஹேன உப அலுவலகங்களில் 2020 ஆம் | ஏடுகளை சீராக்கி சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| ஆண்டில் இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டிற்காக சேகரிக்கப்பட்ட தண்டப்பணம் முறையே ரூபா 1,286,572 மற்றும் ரூபா 411,275 தொகை சபை தீர்மானத்தின் அடிப்படையில் பதிவழிக்கப்பட்டு ஏடுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அந்த தொகை பெற வேண்டிய ஆதனவரி கணக்கில் மேலதிக செலவிடலாக தீர்க்கப்படாமையினால் அக்கணக்கின் மீதி ரூபா 1,697,847 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 07 கணக்கு விடயங்களின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கு மீதிக்கும் உபயோக ஆவணங்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 13,923,283 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 194,628,157 தொகையில் வருமான பட்டோலையின் பிரகாரம் ரூபா 194,407,644 தொகை மற்றும் நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 186,256,961 தொகையும் காணப்பட்டது. | சரி செய்யப்படுமென அறியத்தருகின்றோம். | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 அதிகாரப்பலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய ஹோட்டல்களுக்காக 2020 ஆம் ஆண்டில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் 2021 ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டிற்காக பொருட்களுடன் மூடப்பட்டமையின் 50 சதவீத ஆதனவரி சலுகையை வழங்குவதற்கு 2021 நவம்பர் 08 ஆந் திகதி சபை தீர்மானம் எடுத்து 04 ஹோட்டல்களுக்காக ரூபா 3,515,185 ஆதனவரி சலுகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட நிலைமையினை கவனத்தில் கொண்டு சபையினால் உரிய வரி சலுகை வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகாரத்திற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டள்ளது என அறியத் தருகின்றோம். | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 1.6.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறவேண்டிய கணக்குகள் | | |
| (i) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித முற்பண மீதி மற்றும் களஞ்சிய முற்பண மீதிகள் முறையே 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 2,181,731 தொகை மற்றும் ரூபா 677,250 மீதியாக இருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் கண்டறிந்து அறவிடக்கூடிய பணத்தை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 1991 ஆம் ஆண்டு முதல் வைப்புச் செய்யப்பட்ட போதும் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 980,270 ஆக இருந்ததுடன் அந்த | தகவல்கள் கிடைத்ததும் காசோலைகளுக்காக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 10 வருடங்களுக்கு மேற்பட்ட | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பிழந்த 53 காசோலைகளுக்காக பணம் அறவிடுதலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காசோலையின் பெறுமதி விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | |
| (iii) | 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,102,931 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | - மேற்படி - |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02-04 வருடங்களுக்கு இடையிலான ரூபா 94,152,585 கடன்கொடுத்தோர் மீதியில் நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 91,104,421 மற்றும் களஞ்சியக் கடன்கொடுத்தோர் ரூபா 3,048,165 மீதியாக இருந்ததுடன் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கண்டறிந்து எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 3,187,820 ஆன 07 முதலீடுகளுக்காக முதலீட்டுச் சான்றிதழ் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்வதற்காக வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முதலீட்டுச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் அத்தியாயம் | | | |
| (i) 188(1) ஆம் பிரிவின் (ஈ) | இந்த கட்டளைச் சட்டத்தின் அல்லது ஏனைய ஏதாவது எழுத்து மூல சட்டத்தின் சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அல்லது குறித்துரைத்த பணம் மீள செலுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நகர மண்டபம் ஒதுக்கும் வருமானம் ரூபா 310,400 திரண்ட நிதியத்தில் செலவின பொறுப்பொன்று மீள செலுத்தப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 211, 216 மற்றும் 217 ஆம் பிரிவுகள் | பாதீட்டு கட்டுப்பாடு தொடர்பாக காண்பிக்கப் பட்டுள்ள பிரிவுகளுக்கு முரணாக முன்னைய ஆண்டுகளின் செலவினங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கிக் கொள்வதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுக்காமையால் எழுகின்ற செலவினங்கள் கட்டளைச் சட்டத்தின் மாநகர சபை நிதியத்தை பயன்படுத்துதல் தொடர்பான 188(1) ஆம் பிரிவிற்கு முரணாக ரூபா 18,542,608 நிதியத்திற்கு செலவின பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | இலக்கம் 371(5) மற்றும் (6) | 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய தீர்க்கப்படாத முற்கொடுப்பனவுகள் ரூபா 2,264,092 மீதியொன்று, பொருட் பெறுவனவு குறிப்பு (S.R.Note) இன்றி மீளாய்வாண்டில் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கருத்துரையின் அடிப்படையில் திரண்ட நிதியத்தில் செலவின பொறுப்பாக தீர்க்கப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத் தருகின்றோம். | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (i) | LGD/10A/4/நகி/2019 ஆம் இலக்க 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதிய சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | இலக்கம் LG 23/1 முதல் இலக்கம் LG 25/1 வரையான மாதிரியின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தொடர்பாக தனியாக பதிவேடு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான சொத்துக்கள் பதிவேடு சபையினால் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய LGD/9/2019(I) ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் எல் ஜீ 21/2 படிவத்தில் காணப்படுகின்ற பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கின் எல்லை அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த சபையினால் முற்பண | - மேற்படி - | - மேற்படி - |

கணக்கு எல்லை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 58,059,856 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 12,330,794 ஆகும்.

### 2.2 நிதிக்கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 141(2) இன் பிரகாரம் முதலாவது கையொப்பமிடலாளர் ‘‘செலுத்தும் உத்தியோகத்தர்’’ ஆக கவனத்தில் கொள்ளப்படுவதுடன் காசோலையின் சரியான தன்மை தொடர்பாக கையளிக்கப்பட்டுள்ள செலுத்தும் உத்தியோகத்தர் ஆகும். அதன் பிரகாரம் கணக்காளர் பிரிவு நேரடியாக தொடர்புபடுகின்ற சகல கொடுப்பனவுகள் தொடர்பாகவும் 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதி முதல் 2021 ஒக்தோபர் 26 ஆந் திகதி வரை பொதுக் கணக்கின் மொத்த தொகையான ரூபா 26,217,747 ஆன 52 காசோலைகள் மற்றும் இடர்கணக்கின் ரூபா 29,975 ஆன காசோலையின் தொகை தொடர்பாக முதலாவது கையொப்பமிடலாளராக நகர பொறியியலாளர் பதவியில் முதல் தடவையாக நியமனம் கிடைத்த உத்தியோகத்தருக்கு கையளித்தல் முறையற்ற தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதீருந்தது. நகர ஆணையாளர் மற்றும் நகர செயலாளர் முதலாவது கையொப்பமிடலாளராக கணக்காளர் ஒருவரை நியமிக்கும் வரை பொறுப்பை கையேற்காமை நிதி நிர்வாகத்தின் நலிவானதாக இனங்காணப்பட்டது. | தேவையான சந்தர்ப்பத்தின் போது கையொப்பம் இடுவதற்காக நகர பொறியியலாளரால் முதலாவது கையொப்பம் சபையின் நிரந்தர ஊழியர் சம்பளத்தை செலுத்தும் போது இடப்பட்டதாக இருந்ததுடன் நகர செயலாளரால் இரண்டாவது கையொப்பம் இடப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறான ஆதனவரி நிலுவை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 25,815,000 இனால் அதிகரித்திருந்தது. | முன்னைய ஆண்டுகளின் போதும் ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இந்த ஆண்டில் தொற்றுநோய் நிலைமையின் அடிப்படையில் அவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முடியாதிருந்தமையால் நிலுவை ஆதனவரி அறவிடல் நலிவான நிலையில் உட்படுவதற்கு காரணமாக இருந்ததை குறிப்பிடுகின்றோம். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 2,346,000 ஆன பழைய அனுமதிப்பத்திர கட்டண நிலுவை காணப்பட்ட போதிலும் அதனை அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வியாபார நிலையங்கள் நடாத்தப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட மையால் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதில் பிரச்சினைகளுடனான நிலைமை ஏற்பட்டிருந்தது என அறியத் தருகின்றோம். | அனுமதிப் பத்திரங்கள் பெறாத நிறுவனம் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (இ) | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2020 யூன் 09 ஆந் திகதிய இலக்கம் LGD/06/02/04/பொது என்ற கடிதத்தின் பிரகாரம் கொவிட் தொற்றுநோயின் காரணமாக உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான கடைகள் மூடப்பட்டமையால் சலுகை வழங்கும் போது, வழங்கப்படுகின்ற சலுகையின் காரணமாக கைவிடப்படுகின்ற நிதிப்பெறுமதி தொடர்பாக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 266 ஆம் பிரிவின் | கண்டறிந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (அ) இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் ஆண்டிற்காக சபையினால் 355 கடைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,402,837 வாடகை சலுகை மற்றும் 07 கடைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 310,774 கேள்வி வாடகை சலுகை வழங்குவதற்காக பெறப்பட்ட சபை அங்கீகாரம் ஆளுனருக்கு சமர்ப்பித்து அதற்காக அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறப்பட்ட கடிதத்தின் பிரகாரம் வாடகைப் பணம் உரிய விதத்தில் செலுத்துகின்ற கடைகளுக்காக மாத்திரம் அந்த சலுகை வழங்கியிருந்த போதிலும் கடை வாடகை நிலுவையாக காணப்படுகின்ற 277 கடைகளுக்காக வாடகை சலுகை வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | கொவிட் 19 தொற்றுநோயின் காரணமா சபையின் கடைகளுக்காக 2021 மே மற்றும் யூன் மாதங்களில் தண்டப்பணம் ரூபா 134,873 பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் அங்கீகாரத்தைப் பெற்று உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2021 ஆம் ஆண்டிற்காக சபையின் சொத்துக்களை வாடகைக்கு வழங்கும் போது முன்னைய ஆண்டினை போன்று மீளாய்வாண்டிலும் கேள்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமல் சபை தீர்மானத்தின் அடிப்படையில் 06 சொத்துக்கள் முன்னைய ஆண்டுகளின் வாடகைத் தொகையிலும் 07 | 2022 ஆம் ஆண்டின் கேள்வி கோரி வழங்கப்படும் என அறியத் தருகின்றோம். | மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள் முன்னைய ஆண்டின் வாடகைத் தொகையில் 10 சதவீதம் சேர்த்து தொகையிலும் முன்னைய ஆண்டின் வாடகையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. | | எடுத்தல் வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 10,255,112 பெறுமதியான பயிற்சி புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. செலவின பதிவேட்டின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட பயிற்சி புத்தகங்களின் பெறுமதி ரூபா 3,672,292 ஆக இருந்ததுடன் எஞ்சிய புத்தகங்களின் பெறுமதி ரூபா 474,358 ஆனமையால் ரூபா 6,108,462 பெறுமதியான புத்தகங்களில் பற்றாக்குறையாக இருந்ததுடன் 20 உறுப்பினர்களுக்கு புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமை சமர்ப்பிக்கப்பட்ட பெயர் பட்டியலில் புத்தகங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடப்பட்ட 5,141 பிள்ளைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை.<br>மேலும் புததகங்களின் ஒரு பகுதி நீர்கொழும்பு நகரத்தின் புத்தக விற்பனை கடையில் விற்பனைக்கு விற்பதற்கு காணப்பட்டமை தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பொலிஸ் விசாரணை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நகர சபை உறுப்பினர்களுக்குரிய பெயர் பட்டியலை வழங்குமாறும் வாய் மொழி மூலம் மற்றும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெயர்கள் குறிப்பிடப்பட்ட நகர சபை உத்தியோகத்தரால் அந்த ஆவணங்கள் இதுவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையை அறியத் தருகின்றோம். | பயிற்சி புத்தகங்கள் பகிர்ந்தளித்தல் வெளிப்படையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வணிக வசதிகளுடன் உடைய இரண்டு மாடி நூலக கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ரூபா 168,000,000 கடன் தொகையின் அடிப்படையில் 2016 மார்ச் 16 ஆந் திகதி நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆரம்ப ஒப்பந்தக்காரரின் செயலாற்றல் நலிவான மட்டத்தில் காணப்பட்டதன் அடிப்படையில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து கடன் பணம் விநியோகித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்த 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் 08 பட்டியல்களுக்காக ரூபா 88,155,805 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த இலக்கம் 09 முதல் 12 வரையான ரூபா 38,127,107 ஆன 04 பட்டியல்ள் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளை ஆரம்பிப்பதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி | பட்டயம் பெற்ற பொறியியலாளரை வரவழைத்து நீர்கொழும்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அந்த வெடிப்புக்கள் பரீட்சிக்கப்பட்டிருந்தது. அந்த வெடிப்புக்கள் மூலம் கட்டிடத்தின் கட்டமைப்பு உள்ளக ரீதியில் பாதிப்பு ஏற்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்ட மையால் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவருடனான உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு இணக்கப்பாட்டிற்கு வந்திருந்ததுடன் உரிய வழக்கு தீர்ப்பு வெளியிடப்படுகின்ற காலம் வரையிலும் இந்த கேள்விக்குரிய காலத்தை விஞ்சியிருந்ததுடன் அது வரையில் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கிடையே முன்னர் வழங்கப்பட்ட பொறியியலாளர் மதிப்பீட்டை அமுல்படுத்தாமையால் புதிய பொறியியலாளர் மதிப்பீடொன்றின் கீழ் மீண்டும் கேள்வி செயற்பாடுகளுக்கு சென்று இதுவரையில் தற்போது அதன் மிகுதி வேலைகளை மேற்கொள்ளப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரை மற்றும் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக நிதியேற்பாட்டை ஒதுக்க வேண்டியிருந்த துடன் தாமதமின்றி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிர்மாணிக்கப்பட்ட பகுதிகளில் இடையிடையே வெடிப்பு ஏற்பட்டிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. II கட்டத்திற்காக செயற்திட்ட ஆலோசனைக் கம்பனியால் ரூபா 110,371,441 மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் பாதீட்டின் மூலம் இதற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாமையினால் மிகுதி நிதியேற்பாட்டை வழங்குகின்ற முறை தொடர்பாக நடவடிக்கை எடுக்காமல் மிகுதி வேலைகளுக்காக 2021 யூன் 30 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை 2021 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் கேள்வி கோரி 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கேள்வியை கையளிப்பதற்கு சபை தவறியிருந்தது. மிகுதி வேலைகளுக்காக ஆரம்ப கிரய மதிப்பீடு ரூபா 110,371,441 ஆக இருந்ததுடன் ஒப்பந்தத்தை கையளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட கேள்வி தாரரின் கேள்வி ரூபா 131,698,948 ஆனமையால் ரூபா 21,327,507 இனால் அதாவது சதவீதமாக 19.2 வீதத்தால் விலை அதிகரித்திருக்கும் போது கேள்வி கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் விலை அதிகரித்திருந்த விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. அந்த ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த ரூபா 500,000 ஆன கேள்வி பிணையின் காலம் 2021 நவம்பர் 23 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் அது

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக காலநீடிப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கெபுன்கொட சாந்த அந்தோனி சுற்றுவட்ட பாதையில் 213/D வீட்டு அருகில் உள்ள மதகுகிற்கு அருகிலிருந்து கெனஸ்லிவத்த சிங்க அவர்களின் வீடு அருகில் வரை வீதியின் வடிகாண் மற்றும் மூன்று மதகுகளை நிர்மாணித்து கொங்கிறீட் கட்டை இட்டு காண் மற்றும் மதகுகள் மூன்றையும் மேவுகை செய்யும் செயற்திட்டத்திற்காக கிராம அபிவிருத்தி சங்கத்துடன் 2021 யூலை 20 ஆந் திகதி ரூபா 1,736,442 தொகை உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 464 அடி மதிப்பீடு செய்யப்பட்ட இந்த வடிகாணுக்காக 10 அங்குல கம்பிகள் 7, காணி நீள பகுதிக்கு 2 கட்டுக்களுக்காக மற்றும் சுரங்கத்திற்காக ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்ததுடன் 2022 சனவரி 11 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது வெட்டப்பட்ட 04 இடங்களில் 01 கம்பி முதல் 03 வரை குறைவாக கம்பிகள் இடப்பட்டிருந்தது. மேலும் காணுக்கு கம்பி இடல் திட்டத்தின் பிரகாரம் இடப்படாதிருந்ததுடன் கொடுப்பனவிற்காக கம்பஹா மாவட்ட பொறியியலாளர் குழுவிற்கு அனுப்பி அந்தக் குழுவினாலும் குறித்த நியமத்தின் பிரகாரம் கம்பி இடப்படாதிருந்தமை அறிக்கையிடப்படாதிருந்தமை அறிக்கையிடப்பட்டமையால் இந்த வடிகாணை குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியான நியமத்தில் நிர்மாணிக்கப்படாத பகுதிக்காக முழுமையாக பணம் செலுத்தாதிருப்பதற்கும் மிகுதி பகுதிக்காக பணத்தை செலுத்துவதற்கும் நிறுத்தி வைத்தல் காலத்தை ஒரு வருடம் வரை நீடிப்பதற்கும் 10 சதவீதம் வரை நிறுத்தி வைத்தல் பணத்தை அதிகரிப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமையை அறியத் தருகின்றோம். | செயற்திட்டத்தை மேற்கொள்ளும் போது சரியான மேற்பார்வை மேற்கொண்டு குறித்துரைத்த நியமத்தின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காமச்சோலை டட்லி சேனாநாயக்க மத்திய சந்தையில் (கட்டம் I) கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான கிரய மதிப்பீடு ரூபா 402,355,442 ஆக இருந்ததுடன் அதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 194,000,000 தொகை 2019 யூலை 07 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் சபை நிதியத்திலிருந்து ரூபா 10,000,000 தொகையுமாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதி நிதியத்தை கண்டறியும் முறை காண்பிக்கப்பட்டிருக்கவில்லை கிடைத்த கேள்விகளுக்கிடையே ஆகக்குறைந்த கேள்வியான ரூபா 405,022,717 தொகையில் 10 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு 2021 ஆகஸ்ட் 12 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கை கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறி போலியானதாக தயாரிக்கப்பட்டு போலியான பிணையாளராக இருந்ததன் காரணமாக இந்த வேலைகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்த பிணை சமர்ப்பித்த நிதி நிறுவனம் இலங்கை மத்திய வங்கியின் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நிறுவனமாக இல்லாதிருந்தமை இலங்கை மத்திய வங்கியால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2021 நவம்பர் 23 ஆந் திகதிய சபை அறிக்கையில் இந்த செயற்திட்டம் | புதிய கம்பனி மேலதிக மதிப்பீடொன்று தொடர்பாக கோரிக்கை சமர்ப்பிக்காதிருந்ததுடன் ஆலோசனை நிறுவனம் பொறுப்புக்களின்றி நடவடிக்கை எடுத்தமை அவதானிக்கப்பட்டமையால் உரிய நிறுவனத்திற்கு கொடுப்பனவு நடவடிக்கைகள் இதுவரை நிறுத்தப்பட்டுள்ளதை அறியத் தருகின்றோம். | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக நிதியேற்பாடு ஒதுக்க வேண்டியிருந்த துடன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொடர்பாக காண்பிக்கப்பட்ட நகர பொறியியலாளரின் பரிந்துரையின் பிரகாரம் 2021 திசெம்பர் 02 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு 2022 பெப்ரவரி 17 ஆந் திகதி மீண்டும் கேள்வி கோருவதற்காக சபை அங்கீகரித்திருந்தது. அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.11.4 ஏற்பாடுகளின் பிரகாரம் ஒப்பந்தமொன்றை அமுல்படுத்தல் தொடர்பாக இந்தக் கம்பனி கறுப்பு பட்டியலில் இடப்படாமையால் மீண்டும் கோரப்பட்ட கேள்விக்காக கேள்வி சமர்ப்பிப்பதற்கு முடியுமானதால் இரண்டாவது தடவையில் கேள்வி கோரும் போது ரூபா 479,642,846 தொகையில் கேள்வி வைத்திருந்த ஒரேயொரு நிறுவனம் அந்த கம்பனியாக இருந்ததுடன் மதிப்பீட்டு தொகையினை விட ஒப்பந்தக் கம்பனியின் கேள்வி குறைவாக இருந்தமையால் 2022 ஏப்ரல் 27 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இந்தக் கம்பனிக்கு ஒப்பந்தத்தை வழங்க வேண்டுமென தீர்மானித்திருந்தது. ஒப்பந்தக் கம்பனி மூலம் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுதல் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆலோசனை நிறுவனம் பொறுப்புக்கள் இன்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### 3.3.1 ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காளர் சேவையின் 03 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதன் காரணமாக பிரதான கணக்காளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். | இதற்காக பதிலளிக்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 3.3.2 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2008 முதல் 2019 வரை சேவையை விட்டுச் சென்ற 17 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 594,366 தொகையும், 1982 முதல் 2021 வரை மரணமடைந்த மற்றும் ஒய்வுபெற்றுச் சென்ற 48 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,088,037 தொகையும், 2005 முதல் 2021 வரை மாநகர சபையிலிருந்து புறம்பாக வேறு இடங்களுக்கு இடமாற்றலாகிச் சென்ற 22 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,929,685 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 4,612,088 மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | உரிய கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத் தருகின்றோம். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் வாகன மெய்மையாய்வில் அகற்றுவதற்காக பரிந்துரை செய்யப்பட்ட 10 வாகனங்களில் அகற்றுவதற்கான தகவல்கள் காணப்பட்ட போதிலும் அந்த வாகனங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டு அகற்றப்பட்டிருந்ததுடன் டிறக்டர் காணப்படுகின்ற நிலைமையில் அகற்றப்பட்டுள்ளது என அறியத் தருகின்றோம். | நிதிக் கூற்றக்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |